# தேங்காய் மற்றும் கொப்பரை விலை புத்துயிர் பெறும்

இந்திய பாரம்பரியத்தில் தேங்காய் என்றும் முக்கிய இடம் பெற்றுள்ளது. இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் நாடுகளுக்கு அடுத்து தேங்காய் உற்பத்தியில் இந்தியா மூன்றாவது இடத்தை பிடித்துள்ளது. 2015-16 ஆம் ஆண்டு வேளாண் அமைச்சகத்தின் முதல் முன்கூட்டிய மதிப்பீட்டின்படி, 1.97 மில்லியன் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 14,055 மில்லியன் தேங்காய் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவின் மொத்த உற்பத்தியில் கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் ஆந்திரா ஆகிய மாநிலங்கள் சேர்ந்து 91 சதவீதம் பங்களிக்கிறது. தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், தஞ்சாவூர், கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி ஆகியவை தேங்காய் உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும்.

அமெரிக்கா ஐக்கிய வேளாண் துறை (USDA) அறிக்கையின் படி, 2016 ஆண்டு இந்தியாவின் தேங்காய் எண்ணெய் உள்நாட்டு நுகர்வு 4.05 இலட்சம் டன்களாகும். ஏற்றுமதி வருவாயில் 44 சதவீதம் செயலூட்டப்பட்ட கார்பன் பங்களிக்கிறது. ஏற்றுமதி செய்யப்படும் தேங்காயின் மற்ற முக்கிய பொருட்களான தேங்காய் எண்ணெய், தேங்காய், காயவைத்த தேங்காய், கொப்பரை தேங்காய், ஓடு மற்றும் கரிமம் ஆகியவை ஆகும். இந்தியாவில் 2015-16 ஆம் ஆண்டில் ரூ 1450.24/- கோடி மதிப்பிலான தேங்காய் மற்றும் தேங்காயிலிருந்து பெறப்படும் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்த ஏற்றுமதி மதிப்பு கடந்த ஆண்டை விட 11 சதவீதம் அதிகமாகும். மேலும் காயவைத்த தேங்காய் 63 சதவீதம் மற்றும் தேங்காய் எண்ணெய் 23 சதவீதம் வரை ஏற்றுமதி அதிகரித்துள்ளது. ஐக்கிய அரபு நாடுகள், ஐக்கிய நாடுகள், குவைத் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

மே முதல் ஜூலை மாதங்கள் வரை அறுவடை செய்யும் தேங்காய் ஆண்டின் மொத்த உற்பத்தியில் 34 சதவீதம் பங்களிக்கிறது. பருவம் தவறிய மழையால் தேங்காய் உற்பத்தி கடந்த பருவத்தை விட இப்போது குறைவாகும். இருப்பினும் உற்பத்தியில்லாத பருவத்திலும் கர்நாடகாவிலிருந்து தேங்காய் மற்றும் கொப்பரை வரத்தானது ஆகஸ்ட்

மாதத்தோடு முடிவதால் எதிர்வரும் பண்டிகை காலங்களில் உள்நாட்டு சந்தையில் தேங்காய்க்கு அதிக தேவை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்புத் திட்டம், கடந்த 14 ஆண்டுகளாக ஈரோட்டில் உள்ள அவல் பூந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நிலவிய தேங்காய் மற்றும் கொப்பரையின் விலை மற்றும் பெருந்துறை கூட்டுறவு விற்பனை மையத்திலும் சந்தை ஆய்வுகள் மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் செப்டம்பர்-அக்டோபர் 2016 ஆம் மாதங்களில் ஒரு தேங்காயின் விலை ரூ.8/- முதல் ரூ.9/- வரை இருக்கும், நல்ல தரமான கொப்பரை கிலோவுக்கு ரூ. 58/- முதல் ரூ.60/- ஆக இருக்கும். எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.


<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி - 0422-2431405

<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்
வாசனை மற்றும் மலைத்தோட்ட பயிர்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் - 0422-6611284